பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 17 புதன்கிழமை (31-05-2000) VALAMPURI ஒலி: 163

## ★ இலங்கைக் கடற்பரப்பில்
# அமெரிக்க கடற்படை கப்பல்
# ரோந்து நடவடிக்கை தீவிரம்

## இந்திய உளவுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தற்போது கடும் சண்டை நடைபெற்றுவரும் இவ்வேளையில், இலங்கையின் கடற்பரப்பில் அமெரிக்கக் கடற்படைக் கப்பலின் நடமாட்டத்தை அடுத்து வான்பரப்பில் வேவு விமானம் யாழ் குடாநாட்டு யுத்த நிலையை வேவு பார்த்து வருவதாக இந்திய விமானப்படையினர் உறுதி செய்துள்ளனர்.

இதேவேளை யாழ் குடாநாட்டில் ஏற்படவுள்ள மனித அவலங்கள் குறித்து கவலை கொண்டுள்ள அமெரிக்கா இலங்கையில் எந்த விதமான இராணுவத் தலையீட்டையும் விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடற்பரப்பில் அமெரிக்கக் கப்பல்கள் சில காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை வான்பரப்பிலும் அமெரிக்காவின் விமானம் ஒன்று அடிக்கடி வட்டமிடுவதாகவும் இந்திய புலனாய்வுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை குடாநாட்டு வான்பரப்பில் அமெரிக்க கடற்படையினரின் கண்காணிப்பு விமானம் ஒன்று பறந்துள்ளது இதனை இந்திய விமானப்படையினர் உறுதி செய்துள்ளனர்.

இந்து சமுத்திரத்தில் உள்ள "பியாகோகா

(4 ஆ பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின்போது உயிரிழந்த தமது உறுப்பினர்களின் பெயர் விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர். அவர்களின் விபரம்வருமாறு:

★ வனதேவன் (சின்னத்துரை மதிவேந்தன்) மட்டக்களப்பு
★ கௌசமி (தம்பிப்பிள்ளை சசிகலா) மட்டக்களப்பு.
★ எழில் (தனபாலசிங்கம் கிரிஷா) மட்டக்களப்பு.
★ சுலோமினா (மகேந்திரன் புவிதா) மட்டக்களப்பு.
★ தமிழ் நிலா (இராசையா சஷினா) மட்டக்களப்பு.
★ கியூரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் இன்று நோயாளர்களுடனும் மற்றும் மருந்துப் பொருட்களுடனும் யாழ்ப்பாணம் வருவதாக அறிவிக்கப்படுகிறது.

## பயணிகள் கப்பல் புறப்பட்டது

(புலோலி)

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து நேற்றுமாலை4 00 மணியளவில் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் 354 பயணிகளுடன் திருமலை நோக்கிப் புறப்பட்டது

இதில் பருத்தித்துறையில் இருந்து வந்த 100 பயணிகளும்யாழ்ப்பாணத்திலிருந்து வந்த 254 பயணிகளும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-ச-52

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடமாணவர்களுக்கான (நுண்கலைஉட்பட) கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளதால் அனைத்துக் கலைப் பீடமாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கலைபீடமாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது (4)

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை மெடிக்கல் கிளினிக்கில் சிகிச்சை பெற்றுச் செல்லும் நோயாளிகள் இடநெருக்கடி, கால நெருக்கடிபோன்றவற்றைத் தவிர்க்கும் முகமாக தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள கிழமை நாட்களில் மட்டும் சமுகமளிக்குமாறு மெடிக்கல் கிளினிக் நிர்வாகம் கேட்டுள்ளது (105-4)

## இளம் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பகுதியில் நேற்று ஷெல் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இளம் பெண் ஒருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (சி. சந்திரா 33 வயது என்ற இளம் பெண்ணே காயமடைந்தவராவார். (க-12)

## லொறிகளின் சேவைக்குப் படையினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### இராணுவ அதிகாரியிடம் லோகன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகள் இடையூறின்றிச் சேவை புரிவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலியேற்கு பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ்]

## அரசாங்கம் யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்கும்

### லக்ஷ்மன் கிரியல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் நடைபெறும் போர் தீவிரமடைந்துள்ள இவ்வேளையில் பல உலக நாடுகள் எமக்கு உதவ முன்வந்திருக்கின்றன எனவே கடைசிப்படைவீரர் இருக்கும் வரை இந்தப் போரை அரசு முன்னெடுக்கும்.

இவ்வாறு வெளிவிவகார பிரதியமைச்சர் லக்ஷ்மன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் போசாக்குப் பேணுவதற்கு நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை

இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளகர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் ஆகியோரின் போசாக்கினைப் பேணும் நோக்குடன் நல்லூர் பிரதேச சபை ஜீவாகாரம் போன்ற நிறை உணவை விரைவில் வழங்கவுள்ளது.

இதன் முதற் கட்டமாக ஒரு லட்சம் ரூபாவுக்கு போசாக்கு உணவுப்பொருட்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாகவே பேக்கரிகளுக்கு மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் பாணுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் பொதுமக்களுக்கான பாண் விநியோகத்தை இனிமேல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மேற்கொள்வதென நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மா

[4ஆம் பக்கம் பார்க்க]

## ★ அவசர கால சட்டத்தை நீக்க
# அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு
# சந்திரசேகரன் தலைமையில் குழு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிக்கும் தமிழ்க்கட்சிகளுக்குமிடையில் நேற்று பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளது.

ஐ. தே. கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவசரகால சட்டங்களால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்கள் பற்றி ஆராய்ந்து இச்சட்டத்தை நீக்குவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகர் தலைமையில் ஒரு குழுவும் நியமிக்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 7 இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

யாழ், குடாநாட்டில் தற்போது தொடரும் மோதல்களில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விசேட ஊடக தலைமையகம்நேற்று தெரிவித்தது.

நவீன இராணுவ உபகரணங்கள் சகிதம் இராணுவத்

(4ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**இறைச்சிக் கோழி**

Broller Cullbirds Cockerels

இறைச்சிக்கோழிகள்சுத்தம் செய்து(பாதிக்கோழிஉட்பட) தினமும் பெற்றுக் கொள்ள லாம் 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர் (546)

## SUBRA

**கல்வி நிறுவனம்**

(சித்தன்கேணி)

★ A/L, 2002 GENERAL CHEMTSTY

★ A/L 2001, INOREANIC CHEMTSTY

★ A/L 2002 துரிதமீட்டல் வினாவிடை

**ஆரம்பம்;**

**28-05-2000**

சனி, ஞாயிறு 3 - 4 மணி

செவ்வாய், வியாழன் 3 - 4 மணி

ஆசிரியர்:

**திரு. அன்பு**

✱ O/L DAY CLASS

புதிய பிரிவு ஆரம்பம்:

**05-06-2000**

காலை 7-00 மணி

தரம் 6, 7, 8 புதிய பிரிவுகளும் நடைபெறு கின்றன.

(554)

## கண்டெடுக்கப்பட்டது

தவறவிடப்பட்டஉடுப்புகள் அடங்கிய பயணப் பொதி ஒன்று கண்டு எடுத்து திகழ் கல்வி நிறுவனம் இணுவிலில் ஒப்படைக்கப் பட்டுளளது. உரியவர் தகுந்தஆதாரம்காட் டிப் பெற்றுக் கொளளலாம்

INSTITUTE OF INFORMATICS STUDIES

## கலந்துரையாடல்

எமது யாழ்ப்பாணத் தலைமைநிறுவனத்தில்கணனிக் கற்கை நெறிக் களை மேற்கொண்டு தற்போது சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளுக்குக் கீழ் இடம் பெயர்ந்து இருக்கும் எமது மாணவர்களுக்கான முக்கியகலந்துரையாடல் ஒன்று எமது சங்கானைக் கிளை நிறுவனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் வசதி கருதி வார இறுதி நாள் ஞாயிற்றுக்கிழமை (04 - 06 - 2000) அன்றும், வாரநாள் திங்கட்கிழமை (05-06-2000) அன்றும் பகல் 10.00 மணிக்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

★ நவம்பர் 2000 NCCA பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கும் மேற்படி அறிவித்தல் பொருந்தும்.

இயக்குநர்
IIS

(528) யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

யாழ். வைத்தியசாலை தொடர்ந்தும் இதேயிடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

★ வெளிநோயாளர் பிரிவு காலை 8.30-1-00

★ பொது வைத்திய பரிசோதனை:
சனி காலை 11.00 மணிக்கு

★ கண்வைத்திய பரிசோதனை:
புதன் காலை 11.00

★ காது, மூக்கு, தொண்டை:
சனி - ஞாயிறு காலை 11-00

★ பொது சத்திரசிகிச்சை;
சனி - ஞாயிறு காலை 11.00

★ மனநோய் சிகிச்சை
சனி - ஞாயிறு காலை 11-00

★ பல், தோல் சிகிச்சை
ஞாயிறு காலை 10.00

முன்னர் பதிவுசெய்தவர்களும், புதிதாக பதிவு செய்ய விருப்பவர்களும் உடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### யாழ். வைத்தியசாலை

284, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(565)

## இடம் மாற்றம்

171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ''நியூ லலிதாஸ் ஜுவல்லறி'' இணை நிறுவனங்களாகிய 214, G, கஸ் தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த நகுலா நகை மாடம் 74, கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ,,நியூ நகுலா ஜுவல்லறி ஆகிய ஸ்தாபனங்கள் தற்போது ஒரே கூரையில், கீழ்க் காணும் முகவரியில் இயங்குகின்றது என்பதை எமது வடிக்கையாளருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்தாபனத்தார்,
34, K, K, S, வீதி,
சுன்னாகம்,
(564)

## வங்கி அறிவித்தல்

மாத இறுதி வேலைகளைப் பூர்த்தி செய்து வங்கி ஆவணங்களை நெறிப்படுத்துவதற்காக யாழ். நகரில் இயங்கும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி கிளைகளும் வர்த்தக வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகியனவும் 1. 6. 2000 வியாழக்கிழமை வாடிக்கையாளர்களுக்கான சேவைகளில் ஈடுபடமாட்டாது என்பதை இத்தால் தெரியப்படுத்துகின்றோம்.

இதனால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

தலைவர்
யாழ். மாவட்ட வங்கியாளர் சமாசம் (கி-393)

## வகுப்புகள் நடைபெறுகின்றன

[யாழ்ப்பாணம்]

யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை, தரம் 5 மாணவர்களுக்கான வகுப்புகள் மில்க் வைற் தொழிற்சாலை தலையாழி கொக்குவில் மணிகல்வி நிறுவனம் மற்றும் ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையம் போன்ற நிலையங்களில் ஆரம்பமாகி நடைபெறுவதாக மேற்படி பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார் [க-4]

யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை.

**இராமநாதன் நுண் கலைக்கழகம்**

**நுண்கலைமானி (இசை) / நுண்கலைமானி (நடனம்) இசைக் கலைமானி/நாட்டியக் கலைமானி**

**இறுதியாண்டு செய்முறைப் பரீட்சைகள்**

இராமநாதன்நுண் கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களுக்கான செயன் முறைப் பரீட்சைகள் 05.06.2000,மு.ப.9.00 மணிக்கு இராமநாதன் நுண் கலைக் கழகத்தில் ஆரம்பமாகின்றன. அனுமதி அட்டைகளை இராமநாதன் நுண்கலைக்கழகத்திலிருந்து31 05.2000 முதல் பெற்றுக்கொள்ளலாம். நுண்கலைத்துறை இறுதியாண்டு மாணவர்கள்அனைவரும் இவ்வறிவித்தலைப் பின் பற்றுமாறுகேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பதிவாளர்,
(கி389)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**

**பட்டப்பின் டிப் ளோமா (முழுநேர) கற்கைநெறி 1999/2000**

மேற்படி கற்கை நெறியைப் பின்பற்றும் மாணவர்கள் அனைவரும் 2000. 06 . 01 வியாழக்கிழமை முற்பகல்10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற் துறைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
(கி-390)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் 17 வருடங்களாகக் கடமையாற்றிய முன்னாள் ஆசிரியை

### திருமதி தனபாலசிங்கம் தனலட்சுமி (தனபாக்கியம்)

அவர்கள் டிக்கோயாவில் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்
யாழ்.இந்து ஆரம்பபாடசாலை

(561)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகஸ்தர் திரு. செ. குமார் அவர்களின் அன்புத்தந்தை

### பொன்னன் செல்லக்கண்டு

அவர்கள் அகால மரணமான செய்தி கேட்டு துயருறும் குடும்பத்தினர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை
மயிலிட்டி உப அலுவலக ஊழியர்
நலன்புரிச்சங்கம்

(553)

எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

## சிறி நதியா நகை மாடம்

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## சிறி ரூபா நகை மாடம்

131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி முகவரியில் இயங்கிய இரு ஸ்தாபனங்களும் ஏனைய எமது கிளை ஸ்தாபனங்களும் தற்போது அனேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய தமது சேவையினை தற்காலிகமாக

இல 90E, ஆஸ்பத்திரி முன்பாக,
யாழ் வீதி, மானிப்பாய்.

என்ற முகவரிக்குக் கொண்டு வந்துள்ளதோடு மேற்படி ஸ்தாபனங்கள் 80C, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம் என்ற முகவரியிலும் தமது சேவையினை வழங்கி வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சிறி நதியா நகைமாடம்,
80C கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

சிறி நதியா நகைமாடம்,
90Eஆஸ்பத்திரி முன்பாக,
யாழ். வீதி, மானிப்பாய்.

(569)

''இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது கை செய்தூண் மாலையவர்''
- குறள்

# வலம்புரி

## எழுச்சி பெறும் உதவுகரங்கள்

அவலம் மிகுந்த மக்களை அணைக்க எழுச்சி பெற்ற உதவுகரங்கள் போற்றப்பட வேண்டியன. ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம், சென். ஜோண் அம்புலன்ஸ் தாபனம், மக்கள் நலன்புரிச் சங்கங்கள், டி. பி. எச். எஸ். (சுகாதாரப் பகுதியினர்) மருத்துவபீட மாணவர்கள் எனப் பல்துறையினரும் மனமுவந்து சேவை புரிகின்றனர். இங்கு மருத்துவபீட மாணவர்கள் எழுச்சி பெற்று சேவை புரிவது மக்கட்குப் பெரும் ஆறுதலளிக்கிறது. பாடுபட்டுத் தேடி பணத்தை புதைத்து வைக்கும் கேடுகெட்ட மானிடரை ஔவை அன்று கண்டாள். அந்த வரிசையில் தொண்டர் நிறுவனங்கள் சேரக் கூடாது. வங்கியிலுள்ள பணத்தை தேவை தென்படும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

உயிர் காப்புப் பணியில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்கள் வண்டல் மண் போல ஒதுங்கிக் கொள்ளக் கூடாது. செல்லினால் காயப்பட்டுத் துன்புறுவோர்க்கும், வயோதிபர், நோயாளிகள் என வீடுகளில் அநாதரவாக இருப்போர்க்கும் துணைக்கரம் நீட்ட வேண்டும். செஞ்சிலுவைச் சங்கம் வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் காலத்தில் ஆற்றிய அரும்பணி மனத்தடங்கண் ஊசலாடுகிறது. ஏன் பிரதி தலைவர் புவனேந்திரன் சேவையின்போது இன்னுயிரை மாய்த்தது பசுமையாக இருக்கிறது. [illegible]ந்த வரலாற்றுப் பதிவு[illegible]ள் வலுப் பெறுவதோடு [illegible]தொண்டுகள் தொடர வேண்டும்.

முள்ளியிலும். நெடுங்குளம் பகுதியிலும் சி[illegible]ண்டிருக்கும் இன்னுயிர்[illegible]ளைக் காப்பாற்றத் [illegible]தாண்டு நிறுவனங்கள் [illegible]ன்வர வேண்டும். உயிர் காப்புப் பணி மகத்தானது. அந்நிறுவனங்களின் வரலாற்றுப் பின்னணியைப் பிரகாசிக்கச் செய்வன.

பணிக்காய் எழுந்த பணியகங்கள் யாவும் அகத்தால் அவலப்படும் மக்களைக் காக்க விரைய வேண்டும். பெரிது பெரிது புவனம்பெரிதுஎன்று கூறுவர். ஆனால் எதனிலும் பெரிது தொண்டர் தம் உள்ளம். அன்னவர் பெருமை போற்றுதற்குரியதே.

- அன்புடன் ஆசிரியர்

---

### இடமாற்ற அறிவித்தல்
### Personal Classes

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற Personal Classes வகுப்புகள் யாவும் 1 6-2000 ஆரம்பமாகும்,

A/L 2000, 2001, 2002,

எல்லா மாணவர்களும் 01-06-2000 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர்:- ம. ஸ்பெல்மன்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
அரசடி லேன்,
திருநெல்வேலி.
(கிருஷா அக்கா வீடு)

குறிப்பு:- A/L 2000 மாணவர்கள் உடன் சந்திக்கவும்.

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்:
BECON- கலாசாலை வீதி, திருநெல்வேலி.
SCIENCE CENTER- ஆனைக்கோட்டை.
வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு முன்,
[நேர அட்டவணை தரப்படும்]

---

### தற்காலிக இடமாற்றம்
### றெனி மூக்குக்கண்ணாடி அகம்

இல 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
இல 288. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கண்டி வீதி சாவகச்சேரி

ஆகிய எமது நிறுவனங்கள் தற்காலிகமாக பிரதான வீதி சங்கானையில் உள்ள மெடிலான்ட் மருந்தக கட்டடத்தில் இயங்குகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

றெனி மூக்குக்கண்ணாடி அகம்.
பிரதான வீதி,
மெடிலான்ட்,
சங்கானை.

(கி-386)

---

### NEW LAN CLINIC
### நியூ லான்ட் கிளினிக்

மெடிலான்ட் ஆங்கில மருந்தக நிறுவனகட்டட வளாகத்தில் இயங்கி வருகின்றது.

தினமும் M.B.B.S டாக்டர்களின் ஆலோசனையும் சிகிச்சையும் காலை 7.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடைபெற்று வருகின்றது.

மெடிலான்ட் ஆங்கில மருத்துவ நிறுவனம்
பிரதான வீதி,
சங்கானை. (கி 378

---

### அறிவித்தல்

யா/ புனித யோண் பொஸ்கோ ஆண்டு ஐந்து மாணவர்களின் பெற்றோர்கள் (31-05-2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்குக் கீழ்க்காணும் விலாசத்தில் ஆசிரியரைச் சந்திக்கவும்.

திருமதி R. ரகுநாதன்
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கோயில் வீதி,
கொக்குவில்.

(551)

---

### யா / கொழும்புத்துறைசென்யோசப் வித்தியாலயம்.

ஆசிரியர்கள் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் 2000-05-31 இன்று காலை 10.00 மணிக்கு சமுகமளிக்கவும்,

அதிபர்

(552)

---

### இடமாற்ற அறிவித்தல்

1773. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

மதனா ஜுவல்லறி

இணை நிறுவனம் 190A கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

மைதிலி நகை மாடம்

என்ற இரு நிறுவனங்களும் தற்போது கீழ்க்காணும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்தாபனத்தார்
58, பிரதான வீதி, சங்கானை.

(563)

---

### தேடுகின்றோம்

புத்தூர்ச்சந்தி நேசவாசம் செ. குகேந்திரம் குடும்பத்தை கல்வயல் முத்தையா ரமணி தேடுகிறார்

இ. பரமானந்தன்
18சிவகுருநாதர் வீதி
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல 3209

(C/388)

---

### தகவல் தரவும்

கைதடி நுணாவிலைச் சேர்ந்த (லக்சன் மினிபஸ் உரிமையாளர் சந்திரன்) தவபாலன் அவர்களின் குடும்ப விபரத்தை அறியத்தரவும்

தகவல்
இ. இராசன்
டச்சுறோட் சங்குவேலி

(555)

---

### நடன முருகன் வைத்திய நிலையம்

யாழ்ப்பாணம் சத்திரச்சந்தியில் இயங்கிய நடன முருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக நவாலி றோட் ஆனைக்கோட்டைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

டாக்டர் க. நவரத்தினம்

(544)

---

### தேடுகின்றோம்

ஸ்ரீபவனம் கண்டி வீதி சாவகச்சேரி என்ற விலாசத்தில்வசித்துவந்த திரு. செல்லத்துரை குடும்பத்தினர் எழில் மாடம் நவீனசந்தை, சாவகச்சேரி, யோகநாதன் குடும்பத்தினரையும் தகவல் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
பொ. தி. கைலைநாதன்
ஆனை கோட்டை சந்தி
ஆனைக்கோட்டை
[கொழும்பு மோட்டஸ்]

(387)

---

### தொடர்பு கொள்ளவும்

பேச்சியம் மன் கோயிலடி, நாயன்மார்கட்டு திரு. ஆறுமுகம் மனைவி சின்னமணி மகள் அருண்மணி என்பவர்கள் நேரிலோ தொலைபேசி மூலமோ கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

ITN கொமினிக்கேசன்,
கோயில் வீதி, கொக்குவில்,
தொலைபேசி இல. 021-3123

தகவல்
மருமகள் ராணியின் அக்கா-குஞ்சு

[550]

---

### தேடுகின்றனர்

கைதடி, நுணாவில், சாவகச்சேரியைச் சேர்ந்த முருகேசு அம்பலவாணர் என்பவரை அவரது பிள்ளைகளான குகராம், சஞ்சீவ் ஆகியோர் தேடுகின்றனர்.

(தகவல்)
அ. காருண்யதேவி,
24/6, கல்லூரி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(542)

---

### தேடுகின்றோம்

மகாநதி புடவைக் கடை முத்துராசா, லிங்கம் புடவைக் கடை ரவி, சிந்து உடன் வந்து சந்திக்கவும்.

ரூபி நகைமாளிகை
அல்லி
678/2 கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்.

(558)

---

### வைத்திய நிபுணர் ஆலோசனை

யாழ் . நகரில் இயங்கி வந்த சம்பந்தர் வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம் மானிப்பாய்வைத்திய சாலைக்கு அருகாமையில்

57, காரைநகர் வீதி,

மானிப்பாயில் செயல்படுகிறது என்பதனை அறியத் தருகின்றோம்.

(548)

# மரண அறிவித்தல்கள்

## நரசிங்கம் குகடாசன்

சொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் இருபாலை வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நரசிங்கம் குகடாசன் (இளைப்பாறிய CWEஉத்தியோகத்தர்)29-05-2000 திங்கட்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் 19-05-2000ல் காலமான புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் சிவகாம்பிகை தம்பதிகளின் புத்திரனும், சண்முகம் சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் மற்றும் மீரா(A.O.அவுஸ்திரேலியா) தபோதினி (ஆசிரியை Convent வவுனியா நகுலேஸ்வராமகாவித்தியாலயம் கீரிமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்விஜயகுமார்(Accountant அவுஸ்திரேலியா)முகுந்தன் ஆசிரியர் வவுனியா) ஆகியோரின் மாமனாரும் யாழினி யோகினி (அவுஸ்திரேலியா)சோபிகா, சோபிதா (வவுனியா) ஆகியோரின் பேரனாரும் திருமதி மகேஸ்வரி காசிநாதர் திருமதி அருள்நாயகி சண்முகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை)மற்றும் காலஞ்சென்றவர்களான அமிர்தவல்லி சிவதாசன் ஆகியோரின் சகோதரரும் இரா.சண்முகரத்தினத்தின் (இளைப்பாறியஅதிபர்)சிறிய தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-05-2000 நேற்றுசெவ்வாய்க்கிழமை மாலை இல 167 ஸ்ரேசன் றோட் வவுனியாவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
ச.ஜெயதாசன்
மைத்துனர்

இருபாலை,கோப்பாய்
தற்போதையமுகவரி,சுழிபுரம்

(547)

## இரத்தினம்பாலசுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பாலசுப்பிரமணியம்(பொட்டுபாலா) அவர்கள் (30-05-2000) நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு,திருமதி.கே.கே.இரத்தினம் அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும்,காலஞ்சென்ற திருமதி மனோன்மணி, திரு.இ.சபாரத்தினம் (முன்னாள் உரிமையாளர் பாமா காட்வெயர்ஸ் யாழ்ப்பாணம்)திருமதி.ச.பாக்கியலட்சுமி, திருமதி சு.புஸ்பவதி.திருமதி து.சரஸ்வதி, திரு இ.சிவசுப்பிரமணியம் (உரிமையாளர் ஆனந்தமூர்த்தி சைக்கிள் உதிரிப்பாகம் யாழ்ப்பாணம்)திரு இ.சச்சிதானந்தம் [உரிமையாளர் இரத்தினம் அன்சன்ஸ் தலவாக்கொல்ல]இ.சிவலிங்கம் (உரிமையாளர் இரத்தினா மோட்டோர்ஸ் யாழ்ப்பாணம்)திரு இ. சண்முகராசா [அவுஸ்ரேலியா] திரு இ ரவிந்திரன்[ஜேர்மனி] ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திரு முத்துகுமாரசுவாமி,திருமதி பரமேஸ்வரி,திரு.துரைராசா(கொழும்பு)திருமதிமகாலஷ்மி திருமதி வசந்தகுமாரி(தலவாக்கொல்ல)திருமதி இரத்னேஸ்வரி,திருமதி சாந்தினி (அவுஸ்திரேலியா) காலஞ்சென்றவர்களான திரு.சதாசிவம், திரு.சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31-05-2000 இன்று புதன்கிழமை பொரளையிலுள்ள ஜெயரட்னா மலர்ச்சாலையில்வைக்கப்பட்டுகனத்தை மயானத்தில்1 மணிக்கு தகனம் செய்யப்படும் இத்தகவலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

''புஸ்பவாசா''கொக்குவில் மேற்குகொக்குவிலில் 31-05-2000இன்று புதன் கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தகவல்
இ.சிவலிங்கம்
[சகோதரன்]
(உரிமையாளர் இரத்தினாமோட்டோர்ஸ் யாழ்ப்பாணம்)

''புஸ்பவாசா''
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

(கி391)

## திருமதி கந்தசாமி மகேஸ்வரி (கிளி)

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த கந்தசாமி மகேஸ்வரி 29-05-2000திங்கட்கிழமையன்று காலமானார்.இவர் காலஞ்சென்ற கந்தசாமியின்மனைவியும்,அருள்ராணி (சாவ/மகளிர்கல்லூரிஆசிரியை) செல்வராணி(ஜேர்மனி)இந்திராணி (கனடா) அற்புதராணி[ஜேர்மனி]அற்புதராஜா(கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும்,சிவரஞ்சன், ஜெயக்குமார், யோகலிங்கம்,கிருபைராஜா,ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
அருள்ராணி-சிவறஞ்சன்
(மகள்)

ச.ரவிக்குமார்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி
கணக்கர்வளவு
சந்தரோடை

(595)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மே மாதம் 31 ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது;

### மக்களின்...

கொள்வனவு செய்யப்பட்டுள்ளது

இதே வேளை அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கும் நோக்குடன் மேலும் மூன்று இலட்சம் ரூபாவை ஒதுக்குவதற்கும் மேற்படி பிரதேச சபைத்தலைவர் க. பணிபல்லவராஜன் நடவடிக்கை எடுத்துள்ளார். (த)

### 7 இராணுவத்தினர்...

தினர் போராடி வருவதாகவும் சரசாலை, சாவகச்சேரி போன்ற இடங்களில் மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க

### கூட்டுறவுச்...

ணிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதேசசெயலர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே இனிமேல் பேக்கரிகளுக்கு மாவிநியோகம் செய்வதாகவும், அம் மாவிற்குரிய பாண் போடப்படுகிறதா என்பதை சங்கங்கள் கண்காணிக்கவேண்டும் என்றும்தெரிவிக்கப்படுகிறது. (வ,க)

### அரசாங்கம்..

கிரியல்ல தெரிவித்துள்ளார். கண்டி வீரா மக்கா பள்ளி வாசலில் கடந்த இரு தினங்களுக்கு முன் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்:

தற்போது நடைபெறும் கொடூரமான போர் தவிர்க்க முடியாததாகும் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்த எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. போரையே புலிகள் விரும்புகிறார்கள் எனவே அரசாங்கம் என்ற வகையில் நாம் சும்மா இருக்க முடியாது என்று கிரியல்ல மேலும் தெரிவித்துள்ளார். [வ-ச]

### அரசுக்கு...

டது.

இக்குழு எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன் அரசுக்கு எவ்வாறு அழுத்தம் கொடுக்கலாம் என அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நாட்டின் தற்போதைய நிலை குறித்துஆராய்வதற்குஐ.தே.க.தவிசாளர்கரு.ஜெயசூரியா தலைமையில் குழுவும் நியமிக்கப்பட்டது.

புளொட், ரெலோ, இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக தேசிய தொழிலாளர் காங்கிரஸ் உட்படப் பல கட்சிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டன. (வ-ச)

### அமெரிக்க..

ஸியா ''தீவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த பி.3.ரி எறியன் ரக விமானமே யாழ். வான் பரப்பில் பறந்ததாகவும் இது வெறும் கண்காணிப்பு நடவடிக்கையே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வார முற்பகுதியில் விரிகுடாவில் இருந்து அமெரிக்கா தனது கப்பல் பிரிவொன்றை அரேபியா கடற்பரப்பை நோக்கி நகர்த்தி இருந்தது இது யாழ். குடாவில் விடுதலைப் புலிகளுடன் சண்டையிட்டு வரும் இலங்கை படையினருக்கு ஆதரவு தெரிவித்தே இந்த நகர்வு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கைக்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்த அமெரிக்க இராணுவ இணை அமைச்சர் தாமஸ் ஆர். பிக்கற்றிங் யாழ். குடாவில் நிகழும் மனித அவலங்கள் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளதாகவும் எனினும் இராணுவ உதவிகளை செய்யமாட்டாது என்று கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (வ)

### லொறிகளில்...

தன் பலாலி இராணுவப் பொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் விடுக்கப்பட்ட இவ் வேண்டுகோளை வலி தென்மேற்குப் பிரதேச சபைத்தலைவர் அன்ரன் ஜோன்சனும் விடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

### புலிகள்...

(துரையப்பா கோகிலா) அம்பாறை.

★ சுடர்நிலா
(மாணிக்கம் பஞ்சவர்ணம்) கண்டி.

★ சுலோஜினா
(தனேஸ்வரன் சுஜந்தனா யாழ்ப்பாணம்.

(வ.7

## அறிவித்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அலுவலர்கள் எதிர்வரும்1-6-2000 திகதிவியாழக்கிழமைகாலை9மணிக்குநல்லூர்பிரதேச செயலகத்தில் சமூகம்அளிக்குமாறு பிரதேசசெயலர் சு.புத்திசிகாமணி கேட்டுள்ளார்

உதவி அரசாங்க அதிபர்

(இ-385)

## கண்ணீர் அஞ்சலியும் இரங்கல் திருப்பலியும்

### அருட் தந்தை மைக்கல் சவரிமுத்து

அமரர் அருட்தந்தை மைக்கல்சவரிமுத்து, அ.ம.தி. அவர்களது குருத்துவ வாழ்வுக்காகவும் ஆற்றிய பணிக்காகவும் நன்றி நவின்று, அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிற்காக குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் வியாழக்கிழமை (01.06.2000) காலை 10 மணிக்கு (பு.நேரம்) இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என்பதை அருட்தந்தையர்கள், துறவியர், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தொடர்பகம்
ஆஸ்பத்திரிவீதி
யாழ்ப்பாணம்

மாகாணத்தலைவரும்
அமலமரித்தியாகிகளும்

(சி 396)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கே. கே. இரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான

**இ. சிவலிங்கம்**

அவர்களின் அன்புச் சகோதரனுமாகிய

### இரத்தினம் பாலசுப்பிரமணியம்
(பொட்டு பாலா)

காலமானதை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்திற்கு தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர்
(சி/392) கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு பரமேஸ்வரன்

(முகாமையாளர் கொக்குவில் மேற்கு ஸ்ரீவரா அம்மன் ஆலயம்)

ஆறுகால் மடம் ஆனைக் கோட்டையை பிறப்பிடமாகவும் 383/7 நாவலர் ஒழுங்கை ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட திரு மார்க்கண்டு பரமேஸ்வரன் காலமாகி விட்டார்.

அன்னார் வசந்த குமாரியின் அன்புக் கணவரும் அனுஷா(யாழ்வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) கோபிநாத்(யாழ். இந்து மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மு. மார்க்கண்டு செல்லமணி தம்பதியினரின் அன்பு மகனும் இந்திராணி(கனடா) தேவிகாராணி [கனடா] கலாராணி [ஜேர்மனி]ஆகியோரின் சகோதரரும் ஆனைப்பந்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் லீலாவதி தம்பதியினரின் மருமகனும் நல்லையா(கனடா) காலஞ்சென்ற தவராசா, ஜெயசீலன்,சிவபாலன், மகிந்தகுமார்,நந்தகுமார்,ஜோகேந்திரன்,ராஜ்குமார்,சகுந்தலா,ஆகியோரின் மைத்துனரும் கனடாவில் வசிப்பவர்களான டில்குஷா,விக்கினேஸ்வரராஜா, இந்துஷா, அசோக்குமார்,ஸ்ரீஉஷா,குருபரன்,தவநிருஷன்,நிருஷா ஆகியோரின்மாமனாரும், மாறன்,மாசிலன்,துவாரகி, வராகன், அபிராம் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.05.2000 இன்று புதன் கிழமை'வெண்மதி' ஆறுகால் மடம் ஆனைக்கோட்டையில் நடைபெற்றுபிற்பகல்4.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
திருமதி வசந்தகுமாரிபரமேஸ்வரன்
(மனைவி)
திருமதி இந்திராணி நல்லையா
(சகோதரி)

(568)